# மனம், மதி (4)

எதோ யோசனையில் இருந்த மதியிடம்
மனம் கேட்டது;

'மதியே,
உன்னுடன் சேர்ந்தே இருந்தாலும்
உன்னிடம் என்னால் ஒத்துப் போக முடியவில்லையே,
ஏன்?' என்று;

மதி கேட்டும் கேட்காதது போல் இருந்தது;

'மதியே, உன்னைத்தான் கேட்கிறேன்' என்றது மனம்;

'என்ன மனமே, என்ன கேட்டாய்' என்று
சுதாரித்த படி கேட்டது மதி;

'உன்னிடம் ஒத்துப் போக முடியவில்லையே
ஏன் என்று கேட்டேன்' என்றது மனம்;

யோசனையுடன் மனதைப் பார்த்து
'ஏன் திடீரென்று இந்தக் கேள்வி?'
என்று கேட்டது மதி;

'சும்மாதான்' என்றது மனம்;

'ஏன் பொழுது போகவில்லையாக்கும்'
என்றது மதி;

'சும்மா பேச்சைத் திசை திருப்பாதே,
பதில் சொல்' என்றது மனம்;

'பதில் சொல்லாமல் விட்டாலும் திட்டுவாய்,
பதில் என்று ஏதாவது உளறினாலும் முனகுவாய்,
'சும்மா' எதற்கு வாயைக் கிளறுகிறாய்?'
என்றது மதி;

'தப்பிக்கப் பார்க்காதே, பதில் சொல்' என்று
விடாமல் துளைத்தது மனம்;

'சரி, உளறுவதை உளறி விடுகிறேன்' என்று
தொடங்கியது மதி;

'மனமே,
உனக்கும் எனக்கும் உரசலுண்டு,
மோதலுண்டு, விதண்டா வாதமுண்டு;
முயன்றால் நம்மிடையே ஏற்படும்
முடிச்சுக்கள், சிக்கல்கள், முரண்கள்
அவிழ்க்கலாம், குறைக்கலாம்;

அந்த முயற்சியில்
முனை உண்டு, முட்டுதல் உண்டு,
முட்டிச் சிந்தும் துளிகள் உண்டு,
அழுகை உண்டு, ஆத்திரம் உண்டு,
அடக்கி வைத்த ஆற்றாமை உண்டு,
அனைத்துக்கும் நீதான் காரணம் என்ற
வம்புண்டு, வசையுண்டு;

ஏது எப்படிச் சுழன்றாலும் கவிழ்ந்தாலும்
சுற்றி வரும் இந்த பூமிக்கு
என்றும் மற்றுமோர் சாறு உண்டு'

என்று சொல்லி நிறுத்தியது மதி;

மதியைப் புதிதாய்ப் பார்த்தது மனம்,
'அவ்வளவுதானா?' என்றது;

'அவ்வளவுதான், வேறு என்ன'
என்றது மதி;

மதியைப் போல் மனதும்
கொஞ்சம் யோசனையில் ஆழ்ந்தது;

'ஒன்று மட்டும் தெரிகிறது,
நீ மாறப் போவதில்லை'
என்று முனகலோடு பேச்சை
முடித்துக் கொண்டது மனம்...

அ. சொ
பெங்களூர்
23 டிசம்பர் 2016.